1983 பிப்ரவரி 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

கேளிக்கை வரி (இரண்டாவ திருத்த) சட்டமுன்வடிவு, 1983 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(ஆ) கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்டமுன் வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். டிசோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெறுவதை நான் எதிர்க்கிறேன். ஏனெனில் இந்த காம்பவுண்டிங் டேக்ஸ் முறையில் பல சிக்கல்கள் நடைமுறையில் இருக்கின்றன ஊட்டியிலே இருக்கக்கூடிய.—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெளிவாகக் குறிப்பிட்டு கேட்டுக் கொண்டேன், அறிமுக நிலையில் தயவுசெய்து விளக்கம் அதிகம் வேண்டாம் என்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், காம்பவுண்டிங் முறையில் என்னென்ன குறைபாடுகள் என்று விளக்கமாக பேச ஆரம்பித்திருக்கிறார்கள். ஊட்டி என்றும் கொடைக்கானல் என்றும் இதிலே விளக்கமாக போய்க் கொண்டிருக்க நியாயமில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்; தலைவர் அவர்களே, உங்களுக்கே மிக நன்றாகத் தெரியும். காம்பவுண்டிங் டாக்ஸ் முறையில் இருக்கும் சில அடிப்படை குறைபாடுகள், ஊட்டியிலே 6 தியேட்டர்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அங்கிருக்கும் ஜனத் தொகை கணக்கின் படி வசூல் அவ்வளவு சிறப்பாக இல்லை ஆகவே நஷ்டம் வருகிறது என்று சொல்கிறார்கள். 21 காட்சிகள் காட்ட முடிவதில்லை 17 காட்சிகள் தான் காட்ட முடிகிறது. புதுக்கோட்டையிலே 80,000 பேர்கள்தான் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. 12 தியேட்டர்கள்